**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 63/2022**

**வா.சா.1**

**திரு.சுப்பிரமணியம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் பிரதிவாதி தரப்பில்)**

எனக்கு வயது தற்போது 70. நான் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அயிட்டம் 1 மற்றும் 2 சொத்துக்களை தவிர நான் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் வேறு எதுவும் இல்லை என்றால் உள்ளது. 1 ம் அயிட்ட சொத்தில் நான் எப்போது வீடு கட்டியதாக சொல்கிறேன் என்றால் 1986 ல் கட்டினேன். அயிட்டம் 1 மற்றும் 2 சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்களை நான் எப்போது சுயமாக சம்பாதித்தேன் என்றால் நினைவில்லை. 2015 ம் ஆண்டின் பாகப்பிரிவினைக்கு முன்பாக 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை நாங்கள் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு வரை நாங்கள் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்ததாக கூறும்நிலையில் 1986 ம் ஆண்டு நான் 1 ம் அயிட்ட சொத்தில் தனியாக வீடு கட்டினேன் என்று கூறுவது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ம் அயிட்ட சொத்தில் நான் குடியிருக்கும் வீட்டை தவிர பழைய வீடு ஒன்றும் அதே சொத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டை இந்த வழக்கில் காண்பிக்கவில்லை

என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்தை பாகப்பிரிவினை கேட்ட சமயம் நான் குடியிருக்கும் வீட்டு பகுதியை விட்டுவிட்டு மீதமுள்ள பூமிகளை 3 ஆக பிரித்து அதில் நடுப்பங்கை எனக்கு ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதால் தான் எங்களுக்குள் சுமூகமான பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், பாகப்பிரிவினைக்கு பிரதிவாதிகள் ஒத்துவரவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1, 2 அயிட்ட சொத்துக்களை சட்டப்படி இயற்கை நியதிக்குட்பட்டு பிரிவினை செய்வதை பொறுத்து 3 ம் பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லை என்றால் அது பற்றி தெரியாது.

**4 முதல் 6 பிரதிவாதிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்களதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.**